# மகளிர் விவகாரப் பிரிவாக பரிணமித்திருக்கும் தமிழீழ காவல்துறை





இன்றைய நவீன காலப் பெண்கள் தம்மை அலங்காரப் பொருளாகவும், காட்சிப் பொருளாகவும் மாற்றியமைத்து ஆள் பாதி, ஆடை பாதியாக நம்மிடையே உலா வரும் நிலையைப் பார்க்கும்போது எதிர்வரும் காலங்களில் பெண்களின் மாற்றம் எவ்வாறு அமைந்து விடுமோ? என்ற கேள்வியை நம்முள் தூண்டியுள்ளது.

இந்தப் பெண்களிலிருந்து முற்றுமுழுதாக விலகி நம் தாயகப் பெருமையை உலகறியப் பறைசாற்றி நம் ஈழ மண்ணை மீட்டெடுக்க முழுமையாகத் தம்மை அர்ப்பணித்து, தமிழ் தாயகத்திற்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் பெண் போராளிகளின் தியாக மனப்பான்மை தான் எதற்கு ஈடாகும்? வார்த்தையால் புரட்சி

தமிழீழத்திலே மக்களுக்காக அளப்பெரிய சேவையாற்றினார்கள். தமிழீழ காவல்துறையில் ஆரம்பத்தில் போராளிகளே சேவையாற்றி வந்தனர். ஆனால் தற்போது தமிழ் அறிஞர்களும், யுவதிகளும் தமிழிழ காவல்துறையில் பணியாற்றி வருகின்றனர்.

யாழில் ஆரம்பிக்கப்பட்ட காவல்துறை பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் விஸ்தரிக்கப்பட்டு, தன் சேவையைத் தொடர்ந்தது. "மண்ணில் பிறந்த

வீடே தஞ்சமென இருந்தவர்களை விழிப்படைய வைத்து அவர்களுக்கென குரல் கொடுத்து, தலைவன் பாதையில் மலர்ச்சி பெற்றுத் திகழ்கின்றனர்.

தமிழீழத்தில் எந்தப் பாகத்திலும், எந்த நேரத்திலும் பணியாற்றி, கடமையை உயிராகக் கொண்ட மகளிர் பிரிவினர் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி குற்றமிழைத்தவர்களைத் தண்டித்து, அவர்களுக்கு கருத்துரை வழங்கி நல்வழிப்படுத்தி வருகின்றனர்.

பெண்களின் சமத்துவமான உரிமைகள் என்ன? என்பதை விளக்கங்கள் கொடுத்து அவர்களைத் தனித்துவ உரிமையில் சமத்துவம் பெற வழிவகுத்துக் கொடுப்பதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறாமல் தடுப்பதுடன், குற்றம் நிகழுமாயின் அக்குற்றத்துக்குப் பொறுப்பானவரை நீதியின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கின்றனர் மகளிர் பிரிவினர்.

அண்மையில் கிளிநொச்சி மைதானத்தில் மகளிர் தினக் கண்காட்சியில் தமிழீழ காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவு 06.10.2004 அன்று ஆரம்பித்து, வைக்கப்பட்டது. அங்கு தமிழீழ காவல்துறையின் மகளிர் விவகார மாதிரிப் பணிமனையில் பெண்கள் பற்றிய கண்காட்சிப் படங்களும், மாவீர பெண் மகளிர் பிரிவினர் படங்களும் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

மாதிரிப் பணிமனையின் உட்சென்றபோது மகளிர் விவகாரப் பிரிவின் பணிப்பாளர் இமாகுலேற் செபஸ்தியாம்பிள்ளை எம்மைக் கனிவுடன் வரவேற்றார். அங்கு பெண்களை விட ஆண்கள் கூட்டமே கூடுதலாக கண்காட்சியை பார்த்தும், விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்ததை பார்க்கும்போது எவ்வாறு ஆண்களை வகைப்படுத்தலாம் என்று எண்ணத் தோன்றியது.

தமிழீழ காவல்துறையினுள் மகளிர் விவகாரப் பிரிவு தனியாக பெண்களுக்கென்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. அனேகமான பெண்கள் சமூகத்தில் மிகவும் கொடூரமான முறையில் பாதிப்படைந்து, விரக்தி

யாத பிரச்சினைகளை நீதிமன்றில் ஆஜர்படுத்திவரும் இவர்கள் தமது தலையீட்டால் கிராமங்கள் தோறும் பெண்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் அவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்று அதற்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தும்வருகின்றனர்.

பெண்கள் அனைவரும் விழிப்டைந்து, புரட்சிகரமாகச் செயற்படுவதுடன் அவர்களது விழிப்பின் பயனாக உன்னதமான சுதந்திர சிற்பிகளாகப் பெண்கள் விளங்குவதற்கு ஏற்ற செயல்களுக்கு வடிவம் கொடுக்கும் வகையில் தமிழீழ காவ





மனிதர்கள் விடுதலையுடன் பிறந்தவர்கள். அவர்கள் மதிப்பிலும், சுதந்திரத்திலும், விடுதலையிலும் உரிமையிலும் சம உரிமையோடு திகழ வேண்டும்".

செய்து தோற்பதை விட ஆயுதங்களால் புரட்சி செய்து எதிரியைக் களத்தில் வீழ்த்தப் புறப்பட்ட பெண் போராளிகள் பெண் அடிமைத்தன விலங்கை ஒடித்து, வெளியுலகம் வியக்க காவல்துறையில் பணியாற்ற வந்தார்கள்.

தலைவன் பாதையில் மக்களுக்காக சேவையாற்றத் தொடங்கிய காவல்துறையை எமது மாண்புமிகு தேசியத் தலைவர் 1991.11.19 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக யாழ் கச்சேரி வீதியில் திறந்துவைத்தார். ஆண், பெண் இருபாலாருமாகக் கடமையில் ஈடுபட்ட காவல்துறை மகளிரின் பணி மகளிருக்காக குரல் கொடுத்து வந்தது.

சமூகத்திலே பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு நீதி தேடிக் கொடுக்கும் நிறுவனங்கள் பல இருந்தாலும் தமிழீழத்திலே தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தியதுடன், குற்றமிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வழங்கி,

என்ற மனித உரிமைக் கோட்பாட்டிற்கு அமைய தமிழீழ காவல்துறையினர் செயலாற்றி வருகின்றனர்.

இங்கு குறிப்பாக மகளிர் பிரிவின் சேவையை மட்டும் எடுத்து நோக்குவோமானால் காவல்துறையில் மகளிர் பிரிவினர் கடமையுணர்வுடன் செயலாற்றி வருவதுடன், தமிழீழ காவல்துறையின் தேசிய துணைப் படையிலும் இணைந்து கடமையாற்றுகின்றனர். "மீட்கப்பட்டுக் கொண்டிருக்கும் தாயகப் பிரதேசத்தின் விடுதலைக்காக போரிடுவதும், போராட்டத்தின் பொருட்டு மீட்கப்பட்ட தாயக பரப்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் தேடுகை போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மேலான இலட்சியப் பணியாற்றி வருகின்றனர்.

பெண்கள் சமூகத்தில் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்பட்டு, உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்படைந்து, மூட நம்பிக்கையினாலும், மூடக் கொள்கையினாலும்

சிறுவர் முதல் முதல் பெரியவர்வரை பாதுகாத்து, அங்கவீனர்களை மதித்து, சமூகத்தில் அவர்களும் முன்னுரிமை பெற தம்மால் இயன்ற நடைமுறைகளைக் கையாண்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமெனலாம்.


ஒவ்வொரு பெண்ணும் தமக்குள்ளும் நம் சமூகத்திலும் விழிப்புடன் செயற்பட்டு குற்றச் சம்பவங்களில் உள்வாங்கப்படாமல் தங்களைத் தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துரையை விழிப்புறும் வகையில் பெண்களுக்கு வழங்கி வருகின்றனர். கிராமம் கிரா

**சுவேதா**

மமாகச் சென்று பெண்களுக்கு கருத்துரை வழங்கி வருவதுடன், பாதிக்கப்பட்வர்களுக்கு இழப்பீடு பெற்றுக் கொடுக்கின்றனர்.

இதுவரை காவல்துறை மகளிர் பிரிவுத் தலையீட்டால் பெண்களுக்கு எதிரான பாரிய குற்றச் செயல்கள் திட்டமிட்ட முறையில் நடைபெறுவது மிகவும் குறைவடைந்துள்ளது. ஆட்கொலை, பாலியல் வன்புணர்வு போன்ற குற்றச் செயல்களினால் பெண்கள் பாதிக்கப்படுவது மிகமிகக் குறைவாகவே உள்ளது. இவை மக்களின் கட்டுக்கோப்பாலும், ஒற்றுமையாலும், பண்பாட்டாலும் குற்றச் சம்பவங்கள் நடைபெறுவது குறைவடைந்து வருவதற்கு மகளிர் பிரிவினரின் அயராத பணியே காரணம்.

யுடன் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கென பெண் விடுதலை பெற்றுக் கொடுப்பதுடன், சமூகத்தின் கொடூர சிந்தனையை இல்லாதொழிக்கவும், நாங்கள் இந்தப் பாதையில் தனி





யாகச் செயலாற்றி வரவே மகளிர் விவகாரப் பிரிவை நடுவகப் பணியகத்தின் ஒரு பிரிவாக ஆரம்பித்துள்ளோம் என அதன் இணைப்பாளர் தெரிவித்தார்.

இன்றைய காலகட்டத்தில் கூடுதலான பெண்கள் யுத்தத்தின் கொடுமையால் அதிகம் பாதிப்படைந்துள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார். தமிழீழப் பெண்கள் புரட்சிகரமாக விண்ணுலகம் வியக்க சாதனை புரிந்து கொண்டிருக்கும் தாயகத்தில் சில பெண்கள் இன்னும் மூட நம்பிக்கையில் மூழ்கியுள்ளமையே பல பிரச்சினையை உருவாக்க காரணமாக அமைந்துள்ளன. என அவர்களின் தரவுகள் காரணமாக உள்ளது.

மகளிர் விவகாரப் பிரிவினரிடம் செல்லும் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுவதுடன், தம்மால் முடி

ல்துறை மகளிர் விவகாரப் பிரிவினர் செயற்பட்டு வருவார்கள் என அதன் இணைப்பாளர் எம்மிடம் கூறினார். அதைவிடப் பெண்கள் சிறுவர் விவகாரப் பிரிவுகளை பிரதேச ரீதியாக அமைக்கத் திட்மிட்டுள்ளனர்.

பெண்களே பெண்களைப் புரிந்து பெண்களுக்கெதிரான அடக்குமுறையைக் களைந்தெறிந்து, அவர்கள் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைப் பெற்றுக் கொடுத்தும், பெண் விடுதலையைப் பெற்றுக் கொடுக்கவே மகளிருக்காகத் தோன்றிய காவல்துறையின் மகளிர் விவகாரப் பிரிவினர் தம்மை மகத்துவமான சேவையில் ஈடுபடுத்தியுள்ளமையானது பெண்களுக்கு பெருமை வகிக்க வைக்கின்றது தமிழீழத்தின் ஏனைய பகுதியிலும் இதன் சேவை தொடர வேண்டும். அத்துடன் பெண்கள் சார்பில் மகளிர் விவகார பிரிவினரின் சேவை பணி மேலும் சிறப்புற அவர்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

